**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.65/2023**

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ஆம் நாள் **பி.சா.1** சாட்சி **திருமதி.ராணி** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திருமதி. ராணி** | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**பி.சா.1 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

03.07.2017ம் தேதியிட்ட பிரதிவாதியின் கணவர், பிரதிவாதி பெயருக்கு

எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்று நகல் **பி.சா.ஆ.1** ஆகவும், 30.01.2018, 28.05.2019ம் தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கந்தாய ரசீது எண்ணிக்கை-2 அசல் **பி.சா.ஆ.2** ஆக வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது, 05.04.2021ம் தேதியிட்ட தாவா சொத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு கணினி பதிவிறக்க நகல் **பி.சா.ஆ.3** ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாவை தள்ளுபடி செய்ய கோருகிறேன்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் அன்னூர் வட்டம், குன்னியூரில் வசித்து வருவதாகவும் தற்போது தாளவாடியில் வசித்து வருவதாகவும் குறிப்பிட்டு நிலையில் குன்னியூரில் எத்தனை வருடங்களுக்கு முன்பு வசித்து வந்தேன் என்றால் 33 ஆண்டுகளுக்கு முன்பு. நான் தற்போது 33 ஆண்டுகளாக கெட்டவாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். தாவா சொத்து ஆதியில் ஒரு ராஜு என்பவருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். ராஜு என்பவரின் பெயரிலும், எனது கணவரின் பெயரிலும் வாதி சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.81/1995 தாக்கல் செய்து மேற்படி வழக்கில் இரு தரப்பு விசாரணைக்கு பின்னிட்டு 29.09.2000ம் தேதியில் தீர்ப்பு பெற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. வாதி இந்த வழக்கில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண். 81/1995 வழக்கின் தீர்ப்பு செல்லத்ததக்கதல்ல என்று நான்எதிர் வழக்குரையில் வழக்கு குறித்து எதுவும் தெரியாமல் எப்படி சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனது கணவர் சுப்பிரமணி எனக்கு பி.சா.ஆ.2ஆன தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த சொத்து எனது மாமியருக்கு பாத்தியப்பட்டது அவருக்கு பின்னிட்டு ஒரே வாரிசான எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என்று எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எனது மாமியாருக்கு இந்த சொத்து சத்தியமங்கலம் மாவட்ட நடுவர் நீதிமன்றத்தில் EP.23/2001ன் உத்திரவின் மூலமாக எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்து என்றால் ஆமாம். மேற்படி கிரையம் பெற்ற சொத்தை EA 124/2002 மூலம் நீதிமன்ற அதிகாரி எனது மாமியார் முத்தம்மாளுக்கு சுவாதீனம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சுவாதீனம் கொடுக்கப்பட்ட பின்பு இந்த வழக்கின் வாதி EA 19/2003ன் மூலம் நீதிமன்றம் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய பத்திரமும் சுவாதீனமும் செல்லாது என்றும் மனு தாக்கல் செய்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6ல் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண்.81/1995 வழக்கு நிலுவையில் இருக்கும்போதே எனது மாமியார் முத்தம்மாள் சத்தியமங்கலம்

உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் அ.வ.எண்.291/1998என்ற எண்ணில் ராஜு என்பவர் மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் தான் மேற்படி நீதிமன்றத்தில் **EP No**.23/2001என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றம் மூலம் எழுதிப்பெற்ற கிரையப்பத்திரத்தை அதே நீதிமன்றம் **EA No**.19/2003 என்ற எண்ணில் மேற்படி கிரையம் செல்லதக்கதல்ல என்று வா.சா.ஆ-6ன் மூலம் முடிவு கண்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. **EA.No**.19/2003 என்ற எண்ணில் ஏற்கனவே நீதிமன்ற அதிகாரி மூலம் எனது மாமியார் முத்தம்மாளுக்கு கொடுக்கப்பட்ட சுவாதீனத்தை ரத்து செய்து மீண்டும் இந்த வழக்கின் வாதிக்கு மறு சுவாதீனம் செய்து கொடுக்க உத்திரவு ஏற்பட்டு நீதிமன்ற அதிகாரி மூலம் மறு சுவாதீனம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி தெரியாது. மேற்படி **EA** 19/2003 மனுவில் ஏற்பட்ட உத்திரவை எதிர்த்து 1ம் கூடுதல் சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையத்தில் **AS.No**.14/2008 என்ற எண்ணில் எனது மாமியார் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு 22.08.2008 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு எதுவும் தெரியாது. எனது மாமியார் சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் அவ.எண்.2/2005 என்ற எண்ணில் இந்த வழக்கின் வாதிக்கு எதிராக அ.வ.எண்.81/1995 என்ற எண்ணில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை

செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கு இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு 22.11.2007ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு ஏற்பட்ட விவரமும், மேற்படி தீர்ப்பை எதிர்த்து எனது மாமியார் கோபிசெட்டிபாளையம், 1ம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு AS No.13/2008 வழக்கு இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு 22.08.2008ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஏற்கனவே அ.வ.எண்.81/1995ல் பெற்ற தீர்ப்பு மேல்முறையீட்டு வழக்கிலும் உறுதி செய்யப்பட்ட நிலையில் மீண்டும் மேற்படி அ.வ.எண்.81/1995ல் ஏற்பட்ட தீர்ப்பு செல்லாது என்று தற்போது நான் எதிர் கோருரிமை பரிகாரம் கோர அருகதையில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் EA.19/2003ன் மனுவில் இந்த வழக்கின் வாதி பெற்ற மறு சுவாதீனம் செல்லத்தக்கதல்ல என்ற எதிர் கோருரிமை பரிகாரம் கோர எனக்கு எவ்வித உரிமையும், பாத்தியதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மாமியார் கிழமை நீதிமன்றத்திலும், மேல் முறையீட்டு வழக்குகளிலும் தாவா சொத்தில் எந்தவித உரிமையும் பாத்தியதையும் எனது மாமியாருக்கு இல்லை என்று உர்ஜிதம் செய்யப்பட்ட நிலையில், எனது மாமியாருக்கு பாத்தியமில்லாத தாவா சொத்தை எனது மாமியார் காலம் சென்ற பின்பு வாரிசு அடிப்படையில் எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என்றும் அந்த வகையில் எனது கணவர் எனக்கு எழுதிக்கொடுத்த 03.07.2017ம் தேதியிட்ட தாளவாடி

சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.477/2017ஆக பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி எனக்கு எவ்வித உரிமையும் பாத்தியதையும் ஏற்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரத்தின்படி தீர்ப்பாக வேண்டும் என்று வாதி கோருவது என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் எனக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பதும் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் கோரியுள்ள எதிர்கோருரிமை பரிகாரங்கள் அனைத்தும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 04.03.1996ம் தேதியிட்ட ஒரு கௌக்கார்ஜான் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்ட சொத்து விவரத்திற்குண்டான செக்குபந்தியில், இதே காலையில் வடக்கு ராஜு பங்கு பூமி என குறிப்பிட்டு கிரையம் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன். வாதி வெள்ளக்குட்டி 2000ம் ஆண்டு ஏற்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் படி தான் சொத்தின் உரிமையாளர் ஆகின்றார் எனவே 1996ம் வருட பத்திரத்தில் வடக்கு ராஜு பங்கு பூமி என்று கண்டு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய பத்திரம் எந்த வகையிலும் நான் செய்யும் எதிர் வழக்கிற்கு ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பு பெற அவருக்கு பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.